

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

★ ★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10
ஈழநாடு
மலர் 7 EELA NADU இதழ் 159
National Tamil Daily தேசிய தினசரி
(21-7-65)
விசுவாவசு ஆடி 6 ரபி: அவ் பிறை 21 புதன்கிழமை

26 வது ஆண்டுவிழாவை
முன்னிட்டு
அரைச்சலார்
24-6-65 முதல்
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்

பரமேஸ்வரா நிரந்தர சர்வகலாசாலையாகும்

மந்திரிசபைக்கு கல்விமந்திரி சிபார்சு

கொள்ளுப்பிட்டி, செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியை நிரந்தரமான ஒரு சர்வகலாசாலையாக்குவதற்கு கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல மந்திரி சபைக்குச் சிபார்சு செய்திருக்கிறார். இதற்கான செலவுகளுக்கு 15 லட்சம் ரூபாய் உபமான்யம் கோரி மந்திரி விரைவில் மசோதா சமர்ப்பிக்கவிருக்கிறார்'

சர்வகலாசாலை நெருக்கடியை நீக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டி சமர்ப்பித்த சிபார்சுகளின் அடிப்படையிலேயே கல்வி மந்திரி மந்திரிசபைக்கு இச்சிபார்சு செய்திருக்கிறார்.

"யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக்கல்லூரியை நிரந்தர சர்வகலாசாலையாகவும் காலியில் ரிச்மண்ட் கல்லூரியை தற்காலிகமாகச் சர்வகலாசாலையாக்கவும் மந்திரி சிபார்சு செய்திருக்கிறார். குருநாகலையில் ஒரு பெரிய கல்லூரியை சர்வகலாசாலையாக்குவதென்பதுபற்றி எவ்வித முடிவும் செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம் வருமுன்

கல்வி மந்திரி திரு இரியகொல அடுத்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமுன்பாக பரமேஸ்வராக் கல்லூரியை சர்வகலாசாலையாக்க சிபார்சு செய்திருப்பது யாழ்ப்பாண மக்களுக்கு அவர் ஒரு அன்பளிப்புச் செய்வதாகக் கருதப்படுகிறது

மந்திரி—மேயர்

பேச்சுவார்த்தையில் கட்சிபேதம்

காரணமாக எவரும் புறக்கணிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாதிரிச் சந்தை, பஸ் நிலைய இடமாற்றம் ஆகியவை குறித்து தினசரிப் பத்திரிகை ஒன்றில் (ஈழநாடு அல்ல) வெளியான செய்தி குறித்து மேயர் திரு எஸ் வி மகாதேவா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

மாநகர மாதிரி சந்தை அமைப்பு, பஸ் நிலைய இடமாற்றம் மற்றும் நகர வர்த்தகப் பகுதி, கைத்தொழில் பகுதி, வாழிடமென வலயங்களாகப் பிரிப்பது போன்ற விடயங்களை குறித்து சபை ஏற்கனவே செய்துள்ள முடிவுகளை மாநகர முதல்வர் என்ற முறையில் செயல்படுத்த யான் கடமைப்பட்டிருந்தாலும் அவற்றை அமுல் செய்வதில் ஏற்பட்ட நிர்வாக ரீதியான சிக்கல்கள் சிலவற்றை தீர்க்கவேண்டியிருந்ததாலும் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது

ஏற்கனவே பெரும்பான்மை வாக்குகளால் சபை செய்து கொண்ட முடிவுகளையிட்டு சபை அங்கத்தவர்கள் யாவரையும் சேர்த்து அமைச்சருடன் மகாநாடு கூடுவதென்பது மீண்டும் சபை முடிவுகளை சர்ச்சைகளுக்கு உள்ளாக்குவதிலேயே போய்முடியும் இவ்வித முடிவில்லாத சர்ச்சைகளும் விவாதங்களும் விடயங்களை இழுபடப்பட செய்யுமேயல்லாமல் சபைத் தீர்மானங்களை நிறைவேற்ற உதவா. சபைத்தீர்மானங்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக அமைச்சருடன் நான் நடத்தவேண்டியிருந்த மகாநாட்டில் மாநகர சபையின் பகுதித் தலைவர்கள் சிலராவது கலந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியம் எனக் காணப்பட்டது

மகாநாட்டிற்கு சபை அங்கத்தவர்கள் யாரும் அழைக்கப்படவில்லை. அப்படி அழைக்கப்படாமைக்குக் காரணம் அழைக்கப்படவேண்டுவது அவசியம் என்று கருதப்படாமையே ஆகும். அக்கறையுள்ள அங்கத்தவர்கள் சிலர் சந்தர்ப்பவசமாக தமக்குகிடைத்த வாய்ப்பை பயன்படுத்த விரும்பியதை யான் வரவேற்றேன். கட்சிச்சார்பு குறித்து எவரும் புறக்கணிக்கப்படவில்லையென்பதையும் மகாநாட்டில் கலந்துகொண்டவர்கள் யாவரும் ஒரு குறிப்பிட்ட கட்சியை மட்டும் சார்ந்தவர்கள் அல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

"புரட்சிவீரர் தத்தின் நாமம் சரித்திரத்தில் இடம் பெறும்"

மறைந்த தேசபக்தருக்கு தலைவர்கள் புகழ்மாலை

புதுடில்லி, ஜூலை 20

இன்று டில்லியில் காலமான வரலாற்றுப் புகழ்பெற்ற புரட்சி வீரர் தத்தின் பூதவுடல் நாளை தகனக்கிரியைக்காக பிரோஸ்பூருக்கு எடுத்துச் செல்லப்படும்.

காலஞ்சென்ற தத்தின் பூதவுடல் மீது ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் சார்பாக மலர் வளையம் ஒன்று வைக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் அவரது பூதவுடலை இன்று முதலில் தரிசித்தவர்களில் பிரதம மந்திரி திரு. சாஸ்திரியும் ஒருவர். திரு தத்தின் நாமம், இந்திய சரித்திரத்தில் அழியா இடம்பெற்றிருக்கும் என அப்போது அவர் கூறினர்.

ஒரு மாபெரும் புரட்சியாளர் மறைந்துவிட்டார் என பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் குறிப்பிட்டார்.

தத்தின் சடலம் பொது மக்களின் தரிசனத்திற்காக இன்று டில்லி நகரமண்டபத்தில் வைக்கப்பட்டது. லோகசபை சபாநாயகர் ஹுக்கும்சிங், ராஜ்யசபைத் தலைவரும் உபஜனாதிபதியுமான டாக்டர் ஸாகிர்ஹுசெயின் ஆகியோர் மலர்வளையங்களை சடலத்தின் மீது வைத்து தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

ஸ்ரீமதி இந்திராகாந்தியும் பார்லிமெண்டின் இருசபை அங்கத்தினர்களும் மறைந்த புரட்சி வீரருக்கு தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

பஞ்சாப் முதன் மந்திரி திரு. ராம்கிஷன் விடுத்துள்ள செய்தியில் பகத்சிங்கின் நாமத்துடன் தத்தின் நாமமும் சேர்ந்து, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு என்றும் வழிகாட்டியாக விளங்கும் எனக் கூறினர்.

காலஞ்சென்ற தத் சிகிச்சை பெறுமுகமாக கடந்த நவம்பர் மாதம் பாட்டியாலாவிலிருந்து அழைத்துவரப்பட்டார்.

இறக்கும்போது படுக்கை அருகே தத்தின் முன்னாள் புரட்சித்தோழர்கள் இருவரும் பகத்சிங்கின் 88 வயதான தாயாரும் அருகில் இருந்தனர். இந்த மூதாட்டி தத்தை தன் சொந்த மகனைப் போல் அவரது கடைசிக்காலத்தில் கவனித்து வந்தார்.

இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் ஸ்ரீ தத்தின் சடலத்திற்கு அஞ்சலி செலுத்திக்கொண்டனர்.

11 படங்கள் கிடைத்தன

கேட்கென்னடி, ஜூலை 20

செவ்வாய்க்கிரகத்தின் 10-வது, 11-வது படங்களை "மரீனர் 4" நேற்றிரவு பூமிக்கு அனுப்பியது. மொத்தம் அது எடுத்திருப்பதாகக் கணக்கிடப்படும் 20-வது கடைசிப் படம் வருகிற சனிக்கிழமை பூமிக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர்களுக்கு சிங்கள நிபந்தனை

யாழ்ப்பாணம், புதன்

வடபிரதேச உதவிக் கல்வி அதிபதியினால் அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

முன்னுள்ள அரசாங்கம் பாடசாலை அதிபர்களும் உதவி அதிபர்களும், ஏனைய ஆசிரியர்களும் மாத்திரம் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்று சுற்றுநிருபம் அனுப்பியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் உதவி வித்தியாதிபதி தெரிவித்திருப்பதாவது: "குறித்த காலத்துள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டும், உமது பதவியில் உம்மை உறுதிப்படுத்துதல் ஏனைய நிபந்தனைகளுடன் சிங்களத்தில் மூன்றாந்தர தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைதலைப் பொறுத்ததாகும்.'

தகுதிகாண காலத்துள் சிங்களப் பரீட்சையில் சித்தியடையத் தவறினால் புதிய நியமனம் பெறும் ஆசிரியர்கள் சேவையிலிருந்து விலக்கப்படுவார்கள் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் பெறும் ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியேயுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரியவருகிறது

5 வருடங்களுக்கு மேல் தேசிய அரசாங்கம் நிலைக்காது

திருமதி சிறிமா கூறுகிறார்

கொழும்பு, செவ்வாய்

'இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க எதுவித சதித்திட்ட முயற்சியும் நடைபெறவில்லை, தற்போது பதவியில் இருக்கும் அரசாங்கம் தனது 5 வருடகால எல்லைவரைக்கும் ஆட்சிசெலுத்தட்டும் அதன் பின் மக்கள் பதவியிலிருந்து அகற்றட்டும்'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அத்தனகலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'நானொரு ஜோதிடரல்ல. ஆனால் எனது அரசியல் அனுபவத்தின் மூலம் ஒன்றைமட்டும் நிச்சயமாகக் கூறமுடியும் அது என்னவெனில் இந்த அரசாங்கம் அதிககாலம் நீடித்து இருக்காது என்பதே. அடுத்த பொதுத்தேர்தலொன்று அண்மையில் நடைபெறுவது அசாத்தியமே. நாட்டின் பொருளாதார நிலையே இதற்குக் காரணம்' என்றும் திருமதி சிறிமா கூறினர்.

வேலை நிறுத்தம் முடிவு

கொள்ளுப்பிட்டி, செவ்வாய்

துறைமுகத் தொழிலாளர்களுக்கும் ரயில் சேவையாளர்களுக்கும் கொழும்புத் துறைமுகத்தில் கடந்த ஆறு நாட்களாக நடைபெற்ற வேலை நிறுத்தத் தகராறு இன்றுடன் முடிவடைந்துள்ளது.

கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், புதன்

சாந்தைதர் மடம் கற்பக விநாயகராலய திருப்பணியை முன்னிட்டு இன்று மாலை 6 மணி முதல் பூசலார் நாயனார் என்னும் பொருள் பற்றி முத்தமிழ்மணி மணிபாகவதர் கதாகாலக்ஷேபம் செய்வார்.

மணிவாக்கு

எவர் தமக்கு மட்டுமே சமைத்துக் கொள்கிறார்களோ அவர்கள் பாவத்தை உண்கிறார்கள்.

— கீதாவாக்கு.

ஈழநாடு

EELA NADU National Tamil
Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆடி 6 உ (21-7-65)

வெளிநாட்டு மூலதனம்

இலங்கையில் தொழில் விருத்தியை ஏற்படுத்துவதற்கு வெளிநாட்டார் இங்கு முதலீடு செய்வதற்கு வசதிகளை அளிக்க வேண்டுமென்றும் இலங்கையருக்கும் இலங்கையரல்லாதாருக்கும் தொழில் அபிவிருத்திக்கு தூண்டுதல் அளிக்கப்பட வேண்டுமென்றும் கைத்தொழில், மீன்பிடி மந்திரி நிதிமந்திரிக்கு யோசனை கூறியுள்ளார். நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கக் கூடிய இந்த யோசனையை நிதிமந்திரி விரைவில் பரிசீலனை செய்ய வேண்டும்.

ஸ்திரமான கைத்தொழில் வர்த்தகக் கொள்கையும் ஸ்திரமான ஆட்சியும் உள்ள ஒரு நாட்டில்தான் வெளிநாட்டார் முதலீடு செய்யமுன்வருவர். ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அந்த நாட்டில் மூலப்பொருள்களும் வளமும் எவ்வளவுதான் இருந்த போதிலும் அவற்றைச் சரியாகப் பயன்படுத்தி அபிவிருத்தித்துறையில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வெளிநாட்டவரின் உதவியும் ஒத்துழைப்பும் மூலதனமும் அவசியம். முன்னேற்றமடைந்துள்ள உலக நாடுகள் பல இதற்குச் சான்றாக விளங்குகின்றன. "தேசியமயம்" என்று தொழில் துறையையும் வர்த்தகத்துறையையும் அரசாங்க உடமையாக்கி அதன்மூலம் 'அதிகார வர்க்கத்தினரின்' கட்டுப்பாட்டுக்குள் அவைகளை ஒப்படைத்த செயல்கள் சென்ற சில வருடங்களாக இலங்கையில் இடம்பெற்று வந்திருக்கின்றன இதன் விளைவாக இங்கு முன்னரே முதலீடு செய்து தொழில்களை ஆரம்பித்திருந்தவர்கள் தங்கள் தொழில்களை மூடிக்கொண்டு வெளியேறிவிட்டனர். 'தேசியமய' பீதியினால் வெளிநாட்டார் புதிதாக முதலீடு செய்யவும் முன்வரவில்லை. ஸ்திரமான ஆட்சி இங்கு நிலவாமலிருந்ததும் வெளிநாட்டார் முதலீடு செய்ய முன்வராமலிருந்ததற்கு ஒரு காரணமாகும். வெளிநாட்டு மூலதனம் கிடைக்காததுடன் உள்நாட்டவர் புதிதாகத் தொழில்களை ஆரம்பிப்பதற்கும் தூண்டுதல் அளிக்கப்படவில்லை. தூண்டுதல் அளிக்கப்படாதது மட்டுமல்ல மூலப்பொருள்கள், இயந்திர சாதனங்கள் முதலியவைகளை இறக்குமதி செய்வதற்கும் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டிருந்தன, தடை கட்டுப்பாடுகள் ஒருபுறமிருக்க 'பொன்முட்டையிட்ட வாத்தை' அறுத்துப்பார்த்த கதையாக அதிக வரி விதிக்கப்பட்டதும் தொழில்கள் விருத்தியடையாமல் நசித்துப் போகக் காரணமாயிருந்திருக்கின்றன. உள்நாட்டுத் தொழில் அதிபர்கள் பலர் புதிய தொழில்களை ஆரம்பிக்கத் தயங்கியதற்கும் தொழில்களை விஸ்தரிக்கத் தயங்கியதற்கும் இவையும் ஒரு காரணமாக இருந்தது.

இன்று நிலைமை சிறிதுமாறியுள்ளது. ஸ்திரமான ஆட்சி அமைந்துள்ளதற்கான அறிகுறிகளும் நாட்டின் அமைதியும் ஒற்றுமையும் நிலவக்கூடிய சான்றுகளும் ஸ்திரமான தொழில், வர்த்தகக் கொள்கை கடைப்பிடிக்கக்கூடிய வாய்ப்பும் தோன்றியுள்ள இச் சமயத்தில் வெளிநாட்டார் இங்கு வந்து முதலீடுசெய்வதற்கு வசதிகளையும் தூண்டுதலும் அளிக்கப்படவேண்டும். உள்நாட்டுத் தொழில் அதிபர்கள் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் உள்ள தொழில்களை விஸ்தரிக்கவும் தூண்டுதல் அளிக்கப்படவேண்டும். இயந்திர சாதனங்கள், மூலப்பொருள்கள் இறக்குமதி செய்வதற்கு தீர்வையில் விலக்களிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். வெளிநாட்டார் தமது பணத்தைச் சுரண்டிக்கொண்டு போவதற்கு இடமளிக்காமல் வெளிநாட்டு மூலதனம் இங்கு வருவதற்கு 'தூண்டுதல்' அளிப்பது கஷ்டமல்ல. நிதிமந்திரியும் அரசாங்கமும் கைத்தொழில் மீன்பிடி மந்திரியின் யோசனைகளை விரைவில் பரிசீலனை செய்து நல்லமுடிவுக்கு வருமென்று எதிர்பார்க்கலாம்

விஞ்ஞான மனப்போக்கை சமுதாயத்தில் வளர்க்கும் பணி

வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கத்தின் முயற்சிகள்

— திரு. வை. சுந்தரலிங்கம் —

சென்ற மூன்று தினங்களாக யாழ். மத்திய கல்லூரியில் வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்க ஆதரவில் விஞ்ஞானப் பொருட்காட்சி நடைபெற்றது. வளர்ந்துவரும் சந்ததியினருக்கு விஞ்ஞான அறிவை ஊட்டுவதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு ஆராய்ச்சிகள் நடத்தத்தூண்டும்வகையிலும், இன்னும் பல்வேறு வழிவகைகளில் விஞ்ஞானத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடனும் இயங்கும் வடமாகாண ஆசிரியர் சங்கம் பற்றி அதன் உபகாரியதரிசி இங்கே குறிப்பிடுகிறார்.

இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான நூற்றாண்டாகும். மக்களின் தினசரி வாழ்வுடன் விஞ்ஞானம் இரண்டறக் கலந்துவிட்டது. இக்காலக் கட்டத்தில் உலகின் எதிர்கால மக்களின் வாழ்வை தகுந்த முறையில் வழிகாட்டி உருவாக்கவேண்டிய பொறுப்பு விஞ்ஞான ஆசிரியருக்கு உரிய தொன்றாகும்.

இவ்வுயர்ந்த இலட்சியத்தை நோக்கமாகக்கொண்டு வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கம் கடந்தபல ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. இச்சங்கம் இலங்கை முழுவதற்கும் தனியொரு சங்கமாக மிளிர்கிறதென்பதும் எவ்வித அரசியல் தொழிற்சங்கக் கோட்பாடுகளற்றதும் விஞ்ஞானக் கல்வி முன்னேற்றம் ஒன்றேயே நோக்காகக் கொண்டு இயங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கன.

பாலைவனமாகுமா?

இரேல் நீரியல் நிபுண கலாநிதி எ. அருடியின் கூற்றுப்படி யாழ்ப்பாண மக்கள் தொடர்ந்து இன்று நிலவும் வேகத்தில் கிணற்று நீரை இறைத்து வருவார்களாயின், ஒருசில வருடங்களில் கிணற்று நீர் கடல் நீராக மாறலாமென்ற பீதி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலும் உள்ள 500 கிணறுகளின் நீரை ஒவ்வொரு மாதமும் எடுத்து இரசாயன பரிசோதனை செய்து இக்கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்பதைத் திட்டவட்டமாக அறியும் நோக்கத்துடன் பல விஞ்ஞான ஆசிரியர்கள் இயங்கி வருகின்றார்கள், இவ்வியக்கம் நமது சங்கத்தின் பேராதரவில் நடந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே ஓய்வுப் பாடநேரங்களின்றி அவதியுறும் விஞ்ஞான ஆசிரியர்கள் இப்பணியையும் மேற்கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது.

உயிரின ஆராய்ச்சி

கடல் நீர் தொண்டைமானாறு ஏரியுள் போகாதவாறு தடைச்சுவர் எழுப்பப்பட்டபின் ஏரி நீரிலும் மாற்றம் ஏற்பட்டுவருகிறது. அதே வேளையில் அந்நீரில் வாழும் உயிரினங்கள் எவ்வாறு மாறுகின்றன என்பதை ஆராயும் நோக்கத்துடன் இச்சங்கம் வருடமிருமுறை அங்கு சென்று ஆராய்ச்சி செய்து வருகின்றது.

இவ்வாராய்ச்சி கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. இதுபற்றிய அறிக்கைகள் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன.

பொருட்காட்சிகள்

எமது பல்வேறு நோக்கங்களையும் பூர்த்தி செய்யும் முகமாக இரு ஆண்டுக்கு ஒருமுறை விஞ்ஞானப் பொருட்காட்சி நடத்தி வருகின்றோம். இப்பொருட்காட்சி நடத்தி வருகின்றோம், காட்சிகள் மூலம் விஞ்ஞான ஆசிரியர், மாணவர் தமது விஞ்ஞானத் திறனை வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. விஞ்ஞானம் எவ்வளவு தூரம் ஓங்கி வளர்ந்துள்ளது என்பதை விஞ்ஞானம் இல்லாத மாணவரும் பொதுமக்களும் அறிவதற்கும் இப்பொருட்காட்சிகள் சந்தர்ப்பம் அளிக்கின்றன.

கடந்த மூன்று தினங்களாக யாழ் மத்திய கல்லூரியில் வெற்றிகரமாக இப்பொருட்காட்சியை நடாத்தியுள்ளோம், இதில் பல பாடசாலைகள் பங்கு பற்றியது மட்டுமின்றி ஆயிரக்கணக்கான மாணவரும் பொதுமக்களும் பார்வையிட்டுச் சென்றவை குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான மாணவர் மகாநாடு

இலங்கையில் முதன்முதலாக விஞ்ஞான மாணவர் மகாநாடு கூட்டும் பணியையும் சங்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வாண்டு நடந்த மகாநாடு பொருட்காட்சியுடன் நடந்தது. எதிர்காலத்தில் இம்மகாநாடும் பொருட்காட்சியும் வெவ்வேறு தினங்களில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டில் மாணவர் கூட்டாகவோ, தனியாகவோ, செய்த ஆராய்ச்சிகள் பற்றிய கட்டுரைகள் விவாதங்கள் வினாவிடைகள் ஆகியன இடம்பெறும். இவ்வித மகாநாடுகள் மாணவரிடையே ஒரு விஞ்ஞான மனப்போக்கையும் ஆராயும் துடிப்பையும் ஊக்கத்தையும் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாண்டு மகாநாடு கடந்த ஞாயிறன்று நடைபெற்றது. இதில் "ஒருமரத்தில்" உள்ள இலைகள் வேறுபாடு "நன்னீர் ஏரியில் குடியேற்றம்" "வரணிப் பிரதேசங்களிலுள்ள சில பறவைகளின் வாழ்க்கை வரலாறு"

"உயிரினங்களின் ஒளி" "சில வெளி அவதானிப்புகள்" போன்ற விடயங்கள் விவாதிக்கப்பட்டன.

ஒருவேண்டுகோள்

விஞ்ஞானம் போதிக்கப்படும் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் உள்ள யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி மூலம் விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்படும் இன்றைய நிலையில் இருபது பாடசாலைகளே மட்டுமே இச்சங்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்டுள்ளமை வருந்தத்தக்கது. எனவே கூடுதலான பாடசாலைகள் இச்சங்கத்தில் இடம்பெறுதல் வரவேற்கத்தக்கது.

பிரிட்டிஷ் பத்திரிகையாளர் கருத்து

மேற்கு பெர்லின், ஜூலை 20

மேற்கு பெர்லினில் தங்கியிருக்கும் பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையாளரான திரு. செபஸ்டியன் ஹாப்னர் ஜெர்மன் பிரச்சினை சம்பந்தமாக ஜெர்மன் அரசாங்கம் கையாளவேண்டிய 10 அம்சத் திட்டமொன்றினை வெளியிட்டுள்ளார், அவர் மேற்கு பெர்லினில் ஒரு மாணவர் கூட்டத்தில் பேசுகையில், மேற்கு ஜெர்மன் சோவியத் யூனியனுடன் நல்லுறவுகொள்ளவேண்டுமென்றும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை அங்கீகரிக்கவேண்டுமென்றும் மேற்கு ஜெர்மனி இரு ஜெர்மன் ராஜ்யங்களில் ஒன்று என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் கூறினார்.

ஐயாறன்

[illegible]

ஒரு பாரசீக குட்டிக்கதை: கேளுங்கள், ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா. திடீரென அந்த ராஜாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. கிளியை பேசவைக்கிறார்களல்லவா? அதுபோல கழுதையையும் நன்றாகப் பழக்கினால் பேசவைக்க முடியலாமென்பதுதான்.

ஊரில் தண்டோரா போடச் செய்தான். அதாவது யார் ஒரு கழுதையை பேசச் செய்கிறார்களோ அவர்களுக்கு ஏராளமான செல்வம் கொடுப்பதாக அறிவித்தான். ஆனால் முதலில் ஒப்புக்கொண்டுவிட்டு பின்னர் பேசவைக்க யாரும் தவறிவிட்டால் அவர்களது தலை வெட்டப்பட்டுவிடுமென்றும் எச்சரித்தான்.

எவருக்கும் பணம் பெறுவதில் ஆசைதான், ஆனால் கழுதை பேச மறுத்துவிட்டால், தலைபோய்விடுமே என்ற பயத்திலே பலவாரங்களாக யாருமே முன்வரவில்லை. ஒருநாள் ஓர் ஏழை தன் கழுதையை ஓட்டிக்கொண்டு அரசனிடம் வந்து, 'அரசே! இந்தக் கழுதையை பேசவைக்க முன்வருகிறேன்" என்றான். அரசனும் மகிழ்ந்து 15 வருட காலத்துக்குள்ளாக இதைப் பேசவைத்துவிட வேண்டுமென்றும் அதற்கிடையே வேண்டிய செல்வமெல்லாம் பெற்றுக்கொள்ளும்படியும் உத்தரவிட்டான். ஆனால் அந்த ஏழை 20 வருட அவகாசம் வேண்டுமென்று கேட்டதற்கு, அரசனும் சம்மதித்து விட்டான்.

ஏழைக்கு அரண்மனையிலிருந்து வேண்டிய செல்வமெல்லாம் கொடுத்தனர். அவன் வீட்டிலுள்ள பெண் குழந்தைகளுக்கெல்லாம் ஒரே துக்கம். கழுதையை எத்தனை வருடங்களானாலும் பேசவைக்க முடியாதென்றும், தலைபோய் விடுவது நிச்சயமென்றும் சொல்லிக் கசிந்து அழுதனர்.

அவர்களை அந்த ஏழை தேற்றி, "வீணாக அழாதீர்கள். இன்னும் 20 வருஷ காலத்தில் இந்தக் கழுதை செத்துவிடலாம். அல்லது அரசனோ நானோ இறந்துவிடலாம். எப்படியும் 20 வருஷ காலத்துக்கு வேறு ஏதும் ஏற்படலாம். அதற்குள்ளாக நமக்கு வேண்டிய செல்வமெல்லாம் கிடைக்கும். இது உறுதி. கழுதை சாகாவிடினும் அதை சாக அடித்து, அந்தக் கழுதையைத்தானே பேச வைப்பதாகக் கூறினேன் என்று சொல்லி தப்பிவிடலாம்" என்றதும் வீட்டார் ஆறுதலடைந்தனராம்!

இந்தக் கதையை மாஸ்கோவிலுள்ள தொழிற் சங்க தலைவர் இலங்கையிலிருந்து சமீபத்தில் அங்கு சென்றிருந்த ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் அஸீஸிடம் கூறினாராம் ஏன் தெரியுமா? இலங்கை-இந்தியர் ஒப்பந்தம் பற்றி மாஸ்கோ தலைவர் விசாரித்து 15 வருட காலத்துக்குள் 5 லட்சம் பேர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைக்க உத்தேசித்திருப்பதாக அறிந்ததுமே, இந்த நீண்டகால ஏற்பாட்டைக் கேட்டு, இக்கதையைச் சொல்லிச் சிரித்தாராம். அடுத்த 15 வருடகாலத்துக்குள் எதுவும் நடக்கலாமென்பதும் இந்த ஒப்பந்தம் நிறைவேற முடியாமற் போகுமென்பதும் அவர் கருத்துப்போலும்.

* * *

ஒப்பந்தத்தை உடன் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், இந்தியராக விரும்புபவர்களிடமிருந்து மனுக்களை இந்திய ஹைகமிஷன் உடன் வரவேற்கவேண்டுமென்றும் இலங்கை அரசாங்கம் கேட்பதாகவும், இதேசமயம் இலங்கையராக விரும்புபவர்களும் மனுச் செய்யும்படி தாங்கள் அறிவிக்க தயாரென்றும் இலங்கை அரசாங்கம் கூறுவதாகவும் தெரிகிறது.

(4ம் கலம் பார்க்க)

(5-ம்கலை தொடர்ச்சி)

ஆனால் இதற்கான சட்டத்தை பார்லிமெண்டில்' நிறைவேற்றும்வரை இதை இலங்கை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவர முடியாதாகையால், அவசியமான திருத்தச் சட்டத்தை முதலில் நிறைவேற்றுமாறு இந்தியா கேட்பதாக அறிகிறேன்.

இலங்கையில் பிறந்து, இலங்கை பிரஜா உரிமைக்கு மனுச் செய்து மறுக்கப் பட்டவர் யாராயினும் அவர்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டுமென்றும், அடுத்தபடி இலங்கையில் பிறந்து இப்போது பிரஜா உரிமைக்கு மனுச் செய்து கொள்பவருக்கும் பின்னர் மற்றவர்கள் விஷயத்தையும் கவனிக்கலாமென்றும் தெரிகிறது.

* * *

அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை யருமறையி னகத்தானை யணுவையார்க்குந் தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத் திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக் கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

— திருநாவுக்கரசு நாயனார்

இறுதி வெற்றி கிட்டும்வரை யுத்தம் செய்வோம்

அமெரிக்காவுக்கு வடவியட்நாம் அதிபர் ஹோசிமின் சவால்

ஹானோய், ஜூலை 20

இறுதி வெற்றி கிடைக்கும் வரை வடவியட்நாம் மக்கள் போரிடுவார்களென அந்நாட்டு ஜனாதிபதி டாக்டர் ஹோசிமின் நேற்று அறிவித்தார். வெற்றியில் தமது மக்கள் திட உறுதிகொண்டிருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

தென்வியட்நாம் மக்களும், அமெரிக்க மக்களும் அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன் நேற்று காமன்ஸ்சபையில் வெளிநாட்டுக்கொள்கை பற்றிய விவாதத்தில் பேசியபோது வியட்நாம் பிரச்னையின் தீர்வு ஹனோயின் கையிலேயே இருக்கிறதென்றும், காமன்வெல்த் சமாதானக் குழுவை ஏற்கும்படிசெய்யும் முயற்சியை வடவியட்நாமுடன் எவ்வகையிலும் தொடர்புகொள்வது பிரிட்டனின் கடமையென்றும் கூறினார்.

அமெரிக்கத் துருப்புகள் ஒருதரப்பாக வடவியட்நாமிலிருந்து வெளியேறினால் அது அவமானகரமான தோல்வியாகக் கருதப்படுமென்றும், இதனால் வியட்நாமில் மட்டுமின்றி வேறு பல இடங்களிலும் விபரீதம் விளையக்கூடுமெனறும் திரு. வில்ஸன் தொடர்ந்து கூறினார். அமெரிக்க நிலையை பிரிட்டன் ஆதரிக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா போரை விஸ்தரித்தால் ரஷ்ய, சீனத் தொண்டர்கள் வியட்காங்குக்கு உதவியாக அனுப்பப்படுவார்களென சோவியத் பிரதமர் உறுதியுடன் தெரிவித்திருப்பதாய்க் கூறப்படுகிறது.

பிரான்ஸ் மீது அமெரிக்க வேவு விமானம்!

பாரிஸ், ஜூலை 20

தென் பிரான்ஸிலுள்ள அணுத்தளங்கள் மீது அமெரிக்க வேவுவிமானங்கள் 4 தடவைகள் பறந்ததாக பிரான்ஸ், அமெரிக்காவிடம் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறது.

இந்த விமானங்களை வானத்தில் பிரெஞ்சு சண்டைவிமானங்கள் வழிமறித்ததாயும், அமெரிக்க விமானம் எடுத்திருந்த 175 புகைப்படங்களை திருப்பிக் கேட்டதற்கிணங்க அவை பிரான்ஸிடம் ஒப்படைக்கப்பட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் அமெரிக்கா இந்த ஆட்சேபணையை நிராகரித்து அமெரிக்க விமானங்கள் பயிற்சியிலீடுபட்டிருந்ததாயும் மோசமான காலநிலை காரணமாகவே தடைசெய்யப்பட்ட பகுதியில் அவை புகுந்தன என்றும் கூறியுள்ளது.

கானாவைப்பற்றி புதிய படம்

ஆக்ரா ஜூலை 20

"கறுப்பு நட்சத்திரம்" என்னும் பெயரில் கானாவைப்பற்றி ஒருசெய்தி சினிமாப்படம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசால் தயாரிக்கப்பட்டு ஆக்ராவிலும், பெர்லினிலும் ஏககாலத்தில் வெளியிடப்பட்டது. கானாவை தொழில் மயமாக்கும் அவசியத்தை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள மக்களுக்கு உணர்த்துவதே இப்படம் தயாரிக்கப்பட்டதன் நோக்கமாகும். கானாவில் வோல்டா அணைக்கட்டு போன்ற பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும், மற்றும் அந்நாட்டில் செய்யப்பட்டுள்ள கல்வி வசதிகளையும் இப்படம் எடுத்துக் காட்டுகிறது.

டாக்காவில் அமெரிக்க எதிர்ப்புஆர்ப்பாட்டம்

டாக்கா, ஜூலை 20

டாக்காவில் நேற்று மாணவர்கள் அமெரிக்க விரோத ஆர்ப்பாட்டங்கள் பலவற்றை நடத்தினர்கள், அமெரிக்க விரோத கோஷங்களை எழுப்பியவண்ணம் அட்டைகளை அவர்கள் தாங்கிச் சென்றார்கள். பல இடங்களில் மாணவர் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன, சீட்டோ, சென்டோ ராணுவக் கூட்டிலிருந்து பாகிஸ்தான் வெளியேறவேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடலிலும் தரையிலும் செல்லும்படகு

ஹாம்பர்க் ஜூலை 20

மூன்றடி உயரம் எழும்பும் கடல் அலைகளிலும் வெறும் கட்டாந் தரைகளிலும் சதுப்பு நிலத்திலும் ஓட்டக்கூடிய புதுமையான படகு ஒன்று மேற்கு ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 18 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு, 80 மைல் வேகத்தில் "காற்றில் மிதப்பது" போல இப்படகு செல்கிறது. ஹாம்பர்க், குக்ஸ்ஹாவன் ஆகிய இரு இடங்களுக்கிடையே இப்படகு தற்போது ஓடிக்கொண்டிருக்கிறது.

ஸ்டிவன்ஸன் அடங்கினார்

வாஷிங்டன், ஜூலை 20

காலஞ்சென்ற அமெரிக்க ராஜதந்திரி திரு. ஸ்டிவன்ஸனின் சடலம் நேற்று இல்லினாயிலுள்ள அவரது சொந்த ஊரான புளூமிங்டனில் அடக்கம் செய்யப்பட்டது.

ஜனாதிபதி ஜோன்ஸன் உபஜனாதிபதி ஹம்ரே உட்பட 200 பேர் சவ அடக்கத்தில் கலந்து கொண்டனர், வழிநெடுகிலும் 60000 மக்கள் பிரேத ஊர்வலத்தைக் கண்ணுற்றனர்.

பபாந்திரியோவுக்கு வரவேற்பு

ஏதென்ஸ், ஜூலை 20

பதவியிலிருந்து ராஜினாமச் செய்த முன்னாள் கிரேக்க பிரதமர் திரு. பபாந்திரியோவை அவரது கட்சியின் தலைமைக் காரியாலயத்துக்கருகே லட்சக்கணக்கான மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர் அவரை ஆதரித்து நகரில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

மாலுமிகள் மீட்கப்பட்டனர்

புதுடில்லி, ஜூலை 20

மங்களூருக்கும் கொச்சிக்குமிடையே விபத்துக்குள்ளான கிரேக்கக் கப்பலிலிருந்த 28 சிப்பந்திகளை இந்தியக் கப்பல் காப்பாற்றி அழைத்து வந்தது. கப்பல் மூழ்கும்படிவிடப்பட்டது.

போர்த்துக்கல் எதிர்க்கட்சி

லிஸ்பன், ஜூலை 20

வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் கலந்து கொள்வதில்லை என போர்த்துக்கலின் எதிர்க்கட்சி தீர்மானித்திருக்கிறது.

இரண்டுதலை பாம்புக்குட்டி

அய்யம்பேட்டை, ஜூலை 20

பாபநாசம் தாலுகா சாலியமங்கலம் கிராமத்தில் இரண்டு தலைகளுடன் கூடிய பாம்பு ஒன்று பிடிக்கப்பட்டது. 8 அங்குல நீளமும், கரும் பச்சை நிறத்துடனும், இரண்டு தலைகள், இரண்டு வாய்களுடனும் உள்ள அதற்கு தலை ஒவ்வொன்றிலும் இரு கண்கள் இருக்கின்றன. ஒரே உடலில் இரண்டுதலைகள் இதர அவயங்களுடனிருக்கின்றன. இது ஒரு குட்டியெனக் கூறப்படுகிறது.

போர்த்: கினியில் போராட்டம்

52 பேர் பலி

லிஸ்பன், ஜூலை 20

போர்த்துக்கீசிய கினியில் தேசியவாதிகளுக்கும் அரசாங்கத் துருப்புக்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 52 துருப்புக்கள் கொல்லப்பட்டனர். 8 தேசியவாதிகள் கொல்லப்பட்டதாயும், 12 பேர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

உதயப்பூரில் கலகம்

புதுடில்லி, ஜூலை 20

ராஜஸ்தானிலுள்ள உதயப்பூரில் இரு சாராரிடையே ஏற்பட்டகைகலப்பைத்தொடர்ந்து இருவர் மாண்டனர். போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் மாண்டார். பலருக்குக் காயம் ஏற்பட்டது. நகரில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

5,30,000 பேர் துரத்தப்பட்டனர்?

ராவல்பிண்டி, ஜூலை 20

இதுவரை 5,30,000 இந்திய முஸ்லிம்கள் கிழக்கு பாகிஸ்தானில் பிரவேசித்திருப்பதாக பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

சர்வகலாசாலைக்கு அண்ணா தானம்

சிங்கப்பூர், ஜூலை 20

சிங்கப்பூரில் திரு. அண்ணாதுரையை கௌரவிக்க நடைபெற்ற ஒருபொதுக்கூட்டத்தில் வசூலான பிரவேசக்கட்டணத்தைக்கொண்டு அவரிடம் ஒரு பணமுடிப்பு வழங்கப்பட்டது. 18001 டாலர் அடங்கிய இத்தப் பணமுடிப்பை சிங்கப்பூர் சர்வகலாசாலையின் இந்தியப் பிரிவுக்காக தமிழ் நூல்கள் வாங்கும்பொருட்டு உபவேந்தர் திரு. ஸிப்டேபோவிடம் திரு. அண்ணாதுரை கொடுத்துவிட்டார்.

திரு. அண்ணாதுரையும் திரு. செழியனும் வருகிற 21-ந்திகதி வரை மலேஷியாவில் பல்வேறு இடங்களுக்கும் விஜயம்செய்து உரைநிகழ்த்துவர். பின்னர் தூரகிழக்குப்பகுதியிலுள்ள பிற நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டு சென்னை திரும்புவர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

இந்திய வான எல்லைக்குள் நுழையக்கூடிய எதிரி விமானத்தைக் கண்டுபிடிப்பதற்காக இந்திய எல்லைகளில் அமெரிக்கர் அமைத்துவரும் முன்னெச்சரிக்கைத் தகவல் ரடார் அமைப்புடன் மேற்கண்ட ஏவுகணை நிலையங்கள் இணைக்கப்படும். இது இந்திய நகரங்கள்மீது படையெடுப்பை மேற்கொள்ள சீனர் முற்படாதபடி அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தப் போதிய தடுப்பு நடவடிக்கையாகவும் இருக்கும்.

புரட்சிவீரர் தத் காலமானார்

பகத்சிங்கின் உற்ற தோழர்

புதுடில்லி, ஜூலை 20

சுகவீனம் காரணமாக புதுடில்லி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்த புரட்சி வீரர் பட்டுகேஸ்வர்தத் இன்று அதிகாலை காலமானார். அவருக்கு வயது 55.

திரு. பி. கே. தத் 1910-ம் ஆண்டு கான்பூரில் பிறந்தார். 1928-ம் ஆண்டு தனது 19-ம் வயதில் மாவீரன் பகவத்சிங்குடன் சேர்ந்து டில்லி மத்திய சட்டசபையில் வெடிகுண்டுகளை வீசினர். சட்டசபை அப்போது சிவில் உரிமையைத் தடைசெய்யும் மசோதாவை விவாதித்துக்கொண்டிருந்தது.

பயங்கர புரட்சி வீரர்களான பகவத்சிங்கும், தத்தும் வெடிகுண்டுகளை வீசியபின் தப்பிச் செல்ல முடியவில்லை. பதிலாக இருவரும் கைதாக விரும்பினர் குண்டுகள் வெடித்தவுடன் இதுபெரும் சப்தத்துடன் வெடிக்கவேண்டும் என விரும்பினேன் என்று சட்டசபையில் உரத்த குரலில் சப்தமிட்டார் தத்.

பின்புதன் நண்பரான பகவத்சிங்குடன் லாகூர் சதிவழக்கிலும் அவர்மீது விசாரணை நடைபெற்றது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டார் தத். அரசியல் கைதிகள் சரியாக நடத்தப்படவேண்டும் என அந்தமான் சிறையில் பலதடவை அவர் பட்டினி விரதத்தை மேற்கொண்டார்.

கொடூரமான சிறைவாசத்தால், க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்ட தத், 1938-ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார் ஆனால், உத்தரபிரதேசம், வங்காளம், பஞ்சாப் ஆகிய ராஜ்யங்களில் அவர் பிரவேசிக்கக் கூடாது என பிரிட்டிஷ் அரசாங்கம் தடைஉத்தரவு விதித்தது. பின் 1942-ம் ஆண்டு, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டதற்காக தத் மீண்டும் சிறைவைக்கப்பட்டார். 1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெறும்வரை அவர் பாட்னா சிறையில் காவல் கைதியாக வைக்கப்பட்டிருந்தார்.

பல்லாண்டுகள் சிறையில் அவர் அனுபவித்த கஷ்டங்களும், கொடுமைகளும் வாழ்நாள் பூராவும் அவரை நோயாளியாக ஆக்கியது.

திரு. தத் காலமான செய்தி கேட்டவுடன் பஞ்சாப் முதல் மந்திரி ஆஸ்பத்திரிக்கு முதலாவதாக விஜயம் செய்தார், அவரைத் தொடர்ந்து ஏராளமானோர் சென்றனர்.

தத்தின் பூதவுடல் லூதியானாவுக்கு ரயில் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, பின் பிரோஸ்பூருக்கு கொண்டு செல்லப்பட்டது. மாவீரன் பகவத்சிங்கின் சமாதிக்கருகில் தாம் தகனம் செய்ய படவேண்டும் என அவர் விரும்பியதற்கேற்ப, பகவத்சிங்குக் கருகில் நாளை அவரது பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்திய நகரங்களுக்கு ஏவுகணை பாதுகாப்பு

புதுடில்லி, ஜூலை 20

சீனா திடீரென்று நடத்தக்கூடிய விமானத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புஅளிப்பதற்காக நாட்டில் குறிப்பிட்ட தொழில் நகரங்களைச் சுற்றி வட்டவடிவமான ஏவுகணை நிலையங்கள் அமைக்கப்படுமென்று விஷயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தியாவுக்கு ஆயுதம் விற்பனை செய்வதுபற்றிய ஒப்பந்தங்களின் கீழ் தரையிலிருந்து வான் இலக்கைக் தாக்கும் ஏவுகணைகளின் சப்ளையை ரஷ்யர்கள் விரிவுபடுத்தியுள்ளதாயு இவ்வட்டாரங்கள் தெரிவித்தன. மிக் விமானசப்ளை, அவற்றின் உற்பத்தி, ஏவுகணை சப்ளை ஆகியவைபற்றி விவாதிப்பதற்காக மாஸ்கோவுக்கு சமீபத்தில் இந்திய சீனியர் அதிகாரிகள் மேற்கொண்ட விஜயத்தின் பலனாக ஏவுகணைகளின் சப்ளை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ரஷ்ய உதவியுடன் விமானப்படையில் ஏவுகணை விமானப் பிரிவுகள் அமைக்கப்படும் என பாதுகாப்பு மந்திரி சாவன் தெரிவித்தார்.

(8-ம் கலம் பார்க்க)

பொலாரிஸ் ஏவுகணை நீர்மூழ்கி ஒன்றைக் கட்டுவதற்கான அடித்தளம் நீருக்குள் இறக்கப்படுகிறது. அமெரிக்க கடற்படையில் இத்தகைய நீர்மூழ்கிகள் 41 இருக்கின்றன

மின்சாரம் தாக்கி நால்வர் மரணம்

களனி, செவ்

ட்ஜுலைவிலுள்ள டயர் தொழிற்சாலையில் வேலைசெய்த நான்கு ஊழியர்கள் மின்சாரத்தினால் தாக்குண்டு மரணத்துக்குள்ளான சம்பவம் நேற்று நடைபெற்றது.

எஞ்ஜினியரிங் கார்ப்பரேஷன் ஊழியர்களான இந்நால்வரும் 25 உயரமுள்ள ஏணியொன்றில் நின்றுகொண்டு திருத்தும் வேலைசெய்துகொண்டிருக்கையில் ஏணி சறுக்கப்பட்டு 11,000 வோல்ட் சக்தியுள்ள மின்சாரம் பாய்ந்துகொண்டிருந்த கம்பிகளின் மீது இவர்கள் விழுந்தபோதே இப்பரிதாபகரமான சம்பவம் ஏற்பட்டது.

பு. டபிள்யூ ஜோர்ஜும் (28 வயது), ஜி ஏ. வில்பிரட்டும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். டே. சமிபெரேராவும் (30 வயது) எல். கமதிபாலாவும் (33 வயது) கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்கள்.

REGAL - JAFFNA
NOW SHOWING
Edmund Purdom
in
LAST OF THE VIKINGS
(Cinemascope-Eastmancolor)

கடற்படையினர் கைப்பற்றினர்

பம்பலப்பிட்டி, செவ்

இலங்கை கடற்படையினர் நேற்று 'கந்தோரா' என்ற மீன் பிடிக்கும் இயந்திரப் படகு ஒன்றை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உத்தரவின்படி கைப்பற்றினர். 'கந்தோரா' என்ற மீன்பிடிப் படகில் வேலை செய்யும் ஊழியர்கள் தங்களுக்கு 'போனஸ்' கொடுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக கடலில் வேலை செய்ய மறுத்தனர். இதன் காரணமாகவே வெளிநாட்டு அமைச்சுக் காரியாலயம் தலையிட்டு றோலரைக் கைப்பற்றியது. தற்பொழுது 'கந்தோராவில்' கடற்படை ஊழியர்கள் வேலை செய்கின்றனர்.

கார் – சைக்கிள் மோதல்

காங்கேசன்துறை, செவ்

ஆனைக்கோட்டை வீதியில் நேற்று சைக்கிள் ஒன்றும் கார் ஒன்றும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் சென்ற கே. நாகலிங்கம் என்பவர் பலத்த காயத்துக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காரும் பலத்த சேதத்துக்குள்ளாகியது. இது சம்பந்தமாக பொலிசார் விசாரணை செய்து வருகிறார்கள்.

முதற் பரிசு பெற்றார்

யாழ்ப்பாணம், செவ்

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஜெயகுமாரி சண்முகநாதன் சமீபத்தில் நடைபெற்ற 1965-ம் ஆண்டுக்கான அகில உலகக் கூட்டுறவாளர்தினப் பேச்சுப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் முதற் பரிசுபெற்றுள்ளார். இவர் சென்ற ஆண்டு விவேகானந்த சபையாரின் அகில இலங்கை பேச்சுப் போட்டியில் முதற் பரிசும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடத்திய பேச்சுப் போட்டியில் வெள்ளிப்பதக்கப் பரிசும் பெற்றவர்.

கட்டடத் திறப்புவிழா

கோண்டாவில், செவ்

ஓர் கிராமம் சிறந்து விளங்க வேண்டுமானால் கிராமங்களில் கிராம முன்னேற்ற சங்கங்கள் அமைந்து அதன் மூலம் செயலாற்ற வேண்டும். நாட்டின் ஒற்றுமையையும், பல இனப்பட்ட மதத்தவர்களையும், இனத்தவர்களையும் ஒன்றுசேர்க்கும் சக்தி கிராம முன்னேற்றசங்கங்களுக்குண்டு என்று கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையக் கட்டடத்தை யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு சிவஞானம் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். மற்றும் கிராமசேவகர் திரு செல்வரத்தினம், புகையிரத எஞ்சினியர் திரு வைத்திலிங்கம் ஆகியோர் பேசினர்.

நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை செவ்

புங்குடுதீவு கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு தலைமையில் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு ப கதிரவேலு. காரியதரிசி திரு இ குலசேகரம்பிள்ளை. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

புதியதலைவர்

சுழிபுரம், செவ்

வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவு சமாஜ புதிய தலைவராக டாக்டர் திரு க. கெங்காதரம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக திரு எஸ், சண்முகதாசன் தெரிவுசெய்யப்பட்டார்.

பருத்தித்துறை, செவ்

சென்றவாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த காணியமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா நிரந்தரக்காரியதரிசி திரு எம். ஸ்ரீகாந்தாவுடன் சரித்திரப் பிரசித்திபெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு விஜயஞ்செய்தார். உடுப்பிட்டி, பருத்தித்துறைத் தொகுதி எம். பீக்களும் மந்திரியுடன் ஆலயத்துக்கு வந்திருந்தனர்.

பின்னர் முந்திரிகைச் செய்கைக் காணிகளை அமைச்சர் சென்று பார்வையிட்டார். அமைச்சருக்கும் கூடவந்தவர்களுக்கும் முந்திரிகைச்செய்கையாளர்கள் இளநீர் முதலான பானங்களையும், சிற்றுண்டிகளையும் வழங்கினர்.

கிராமசேவையாளர் கூட்டம்

ஊர்காவற்றுறை, செவ்

யாழ்ப்பாண மாவட்ட கிராம சேவையாளர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் திரு எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. வருடாந்த அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஏ. நடராசா. காரியதரிசி திரு. கே. துரைசிங்கம். தனாதிகாரி திரு. ஏ அலெக்கிஸ். கணக்குப் பரிசோதகர் திரு. எஸ் சோமசுந்தரம் நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

அதிக உணவு பயிரிடுதல்

பம்பலப்பிட்டி, செவ்

விவசாயத்தில் மேலும் அபிவிருத்தி உண்டாக்கும் பொருட்டு விவசாய இலாகா இலங்கை முழுதும் 'அதிக உணவு பயிரிடுக' என்ற முறையில் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரியவருகிறது.

இத்துறையில் அரசாங்க அதிபர் அப்பகுதி காரியாதிகாரி முதலியோரின் ஒத்துழைப்பையும் விவசாய இலாகா கோரியுள்ளது

கெய்ரோ சென்றார்

இணுவில், செவ்

இணுவில் திருநெல்வேலி அரசாங்க கிருஷிக பண்ணை அதிபர் திரு அ. ஸ்ரீரங்கநாதன் நான்குமாத விவசாயப் பயிற்சிக்காக கெய்ரோ சென்றுள்ளார். அடுத்தமாதம் அளவில் இங்கு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கதிர்காமத் திருவிழா

யாழ்ப்பாணம், செவ்

கதிர்காமத் திருவிழாவை முன்னிட்டு இம்மாதம் 23-ம் திகதி (திருவிழா தொடங்கும் தினம்) முதல் பதினறு நாட்களுக்கு நல்லூர் கதிர்வேலாயுத சுவாமி மடத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

●

பம்பலப்பிட்டி, செவ்

எதிர்வரும் கதிர்காமத் திருவிழாவிற்கு விவேகானந்தசபையினர் கொழும்பிலிருந்து ஓர் விசேட பஸ்மூலம் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி செல்லவிருக்கின்றனர். இதற்கான ஒழுங்குகளை விவேகானந்த சபைக் காரியதரிசி செய்துவருகின்றார்.

நியமனம் வழங்குவதில் தாமதம்

அச்சுவேலி, செவ்

1962-ம் ஆண்டு நடைபெற்ற ஸ்தலஸ்தாபன லிகிதர்கள் சேவைக்கான பரீட்சையில் சித்திபெற்ற பலருக்கு இதுவரை நியமனம் கிடைக்கவில்லை. முதலில் இவர்களுக்கு நியமனம் கொடுத்த பின்னரே இச்சேவையில் மேலும் ஆட்களைச் சேர்ப்பதற்கான தேர்வு நடைபெறும் என ஸ்தலஸ்தாபன அமைச்சர் கூறினபோதிலும் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனச்சொல்லப்படுகிறது.

மகத்தான 3வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மொடேர்ன் (பதுளை)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)
என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த

லவகுசா
(முழுநீள கலர்ப்படம்)
உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின்
தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

வருகிறது!
JWT 32 B

மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
Agents :
PHONE : 397 ROYAL DISPENSARY JAFFNA

விளம்பரம்

புதுமுறை இரசாயனப் பயிற்சி

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்குரிய புதுமுறைப் பரீட்சை வினாக்களும், விடைகளும்; விடைத்தாள்களும் அடங்கிய நூல் வெகு விரைவில் வெளிவரும்.

ஆக்கியோன்
க. வயித்தியநாதர் B.Sc (Lond.)
(Dip-in-Ed. Ceylon)

புத்தகம் கிடைக்குமிடம்:-
(I) ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(II) திருமகள் அழுத்தகம், 168 சுன்னாகம்.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

புதன் 21-7-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-30 சேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 படம் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 சேர்ந்த இசை.

கிறீம்சன் இல்லம் வெற்றி

சுழிபுரம், செவ்வாய்

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவர்கள் விளையாட்டுப்போட்டி நேற்றைய தினம் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கிறிம்சன் இல்லம் முதலாவது இடத்தையும் கிளார்க் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

சங்கீத, நடன போட்டிகளின் இறுதிவிழா

கல்வி மந்திரி கலந்துகொள்வார்

குரும்பசிட்டி, புதன்

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் யுனெஸ்கோ ஆதரவில் அகில இலங்கை பாடசாலைகளின் சங்கீத, நடனப் போட்டி இறுதிவிழா 24-ம், 25-ம் திகதிகளில் நடைபெறும். கல்வி இலாகாவின் 28 வட்டாரப் பிரிவுகளில் இருந்து சுமார் 500 பாடசாலை மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பற்றுவர். கிராமிய கண்டிய, கீழைத்தேச நடனங்கள் முக்கிய நிகழ்ச்சியாக இவ்விழாவில் இடம்பெறும். கல்வி மந்திரி இரியகொல்லை பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவார். உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கமிட்டி விழாவுக்கான ஏற்பாடுகள் செய்து முடித்துள்ளனர். வெளி மாகாணங்களில் இருந்து இங்கு வரும் பாடசாலை ஆசிரியர் - மாணவ கோஷ்டிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சரித்திர கலாச்சார இடங்களைப் பார்வையிடவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

வண்டிச் சவாரிப்போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, செவ்

சரவணைக் கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் நாவலர் விளையாட்டு மைதானத்தில் தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமையில் வண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்றது. இரு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் 23 சோடி காளைகள் பங்குபற்றின. மைதானத்தில் காளைமாடு பொறித்த கொடியைத் தீவுப்பகுதி எம். பி ஏற்றி வைத்தார். வடமாகாண பொலிஸ் சுப்பிரின்டன் திரு ஜே. வான்சன்டன் வெற்றி பெற்றவர்களுக்குத் தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும் வழங்கினர். தீவுப்பகுதி காரியாதிகாரி, வேலணை, நாரந்தனை கிராம சபைத் தலைவர்கள், ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவர் ஆகியோர் பிரதம மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர். இதர சில தேசிய விளையாட்டுகளும் இடம் பெற்றன.

போட்டி முடிவு விபரம் வருமாறு:-

'ஏ' பிரிவு - திரு ச. திருச்செல்வம் (மயிலிட்டி). திரு. இ. கணபதிப்பிள்ளை (மாதகல்) திரு அமிர்தலிங்கம் (நாரந்தனை).

'பி' பிரிவு- திரு. அ. சு. பிரமணியம் (திருநெல்வேலி) திரு. கி. தம்பிஐயா (உரும்பிராய்), திரு. சீ. பொன்னுத்துரை (கொக்குவில்).

மரதன் சைக்கிள் ஓட்டம்

ச. மயில்வாகனம் (சரவணை).
கா. சச்சிதானந்தம் (சரவணை)
கா. சற்குணானந்தம் (சரவணை)

அயலவர்கள் கொலை செய்ய முயற்சிப்பதாக கூறியவர் தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்

தன்னை சில அயலவர்கள் கொலை செய்ய முயற்சிப்பதாக தாயாரிடம் கூறி, ஏழு நாட்களாக வேலைக்குப் போகாது, வீட்டிலேயே தங்கியிருந்த லொறி டிரைவரான ரத்தினம் துரையப்பா கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தியபோது காலஞ்சென்றவரின் தாயார் பொன்னம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்ற எனது மகனுக்கு 50 வயது. 15 வருடங்களுக்குமுன் அவரது மனைவி இறந்துவிட்டார். அதன்பின் எனது வீட்டிலிருந்துவந்தார். சம்பவம் நடைபெறுவதற்கு முன் 7 நாட்களாக வேலைக்குப் போகவில்லை. தனக்கு சுகமில்லையென்று கூறியதோடு சில அயலவர்கள் தன்னைக் கொலை செய்ய முயற்சிப்பதாகவும் கூறினார். அவர் வீட்டைவிட்டு வெளியில் செல்வதில்லை.

நேற்றிரவு அவர் விறாந்தையில் படுத்திருந்தார். இரவு 2 மணிக்கு எழுந்து தேநீர் வைத்துக் கொடுத்தேன். அதன்பின் படுத்துவிட்டார். காலை 5 மணிக்கு அயலவரான இராசம்மா, எனது மகன் மரத்தில் தூக்கிட்டிருப்பதாக கூறினார். நான் அங்கு சென்றபொழுது மகன் தூங்கியபடியிருந்தார், நான் எவர்மீதும் சந்தேகங் கொள்ளவில்லை.

ராஜம்மா, பொலிஸ் சார்ஜன்ட், சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரும் சாட்சியம் அளித்தார்கள்.

காலஞ்சென்றவரின் மடியிலிருந்த ஒரு கடிதத்தை பொலிஸார் மரண விசாரணை அதிகாரியிடம் கொடுத்தனர். அக்கடிதத்தில், தான் தற்கொலை செய்வதாக எழுதப்பட்டிருந்தது.

தற்கொலையென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

வெங்காயக்கூடை பின்னுவதால் நாளொன்றுக்கு 8 ரூபா உழைக்கலாம்

உடுப்பிட்டி, செவ்வாய்

வடமராட்சிப் பகுதியிலுள்ள பல கிராம முன்னேற்ற சங்கங்கள் பெயரளவில் உள்ளனவேயன்றி செயலளவில் இயங்குவதில்லை. செயலாற்றுவது கிராம மக்களைப் பொறுத்தது. நம்மால் ஆலோசனை மாத்திரமே கூறமுடியும். தனிப்பட்ட பகுதியினருக்குக் கிணறு பாதை. பாற்பண்ணை முதலியன அமைப்பது கிராம முன்னேற்றமல்ல, கிராமத்தின் ஜனசக்தியே ஒரு முகமாகச் சேர்ந்து முன்னேற வேண்டும். கிராமத்தின் தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தை நம்பியிருக்க முடியாது. பொது மக்கள் சிரமதான இயக்க மூலம் தெருக்களையும், பொதுக் கிணறுகளையும். பாடசாலைகளையும் கட்டி முடிக்க வேண்டும்"

இவ்வாறு வடமராட்சிப் பகுதி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. சே. என் பீ. நவரத்தினராசா இமையாணன் அரசினர் பாடசாலைமண்டபத்தில் நடைபெற்ற இமையாணன் கிராமமுன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

"வேலையில்லை, வேலை கொடுங்கள் என்று ஆண்களும் பெண்களுமாக ஓலமிடுகிறார்கள். மிகவும் இலாபகரமான வழியொன்றை நான் கூறுகிறேன். இப்பொழுது ஒருவெங்காயக் கூட்டின் விலை எட்டுச் சதம். ஒரு பெண் ஒரு நாளைக்கு 100 வெங்காயக் கூடைகள் தயாரித்து எட்டு ரூபா உழைக்கலாம். ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான வெங்காயக் கூடைகள் வருடமொன்றிற்கு யாழ்ப்பாணத்திற்கு தேவைப் படுகின்றன. இவை தற்போது இந்தியாவிலிருந்து இறக்குமதியாகின்றன. ஏன் இலங்கையிலேயே நாம தயாரித்துநமது வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போக்கிக் கொள்ள முடியாது" என்றும் அவர் தமது பேச்சின் போது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த தீர்ப்பாசனப் பகுதியில் இளைப்பாறிய உத்தியோகத்தர் திரு க. வீரவாகு பேசுகையில். "கிராம வாசிகளுக்கிடையில் ஒற்றுமை, ஊக்கம், விரிந்த மனப்பான்மை என்பன இருந்தால் கிராமம் முன்னேறுவதற்கு தடை இராது. குராமத்தில் பற்று ஏற்படாவிடில் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஏற்பட முடியாது" என்றும் கூறினர்,

திரு க. மாணிக்கம், திரு ஆனந்தராசா ஆகியோரும் பேசினர். மேற்படி சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- க வீரவாகு, உபதலைவர்- திரு இ டி இராசரத்தினம், திரு க அப்புக்குட்டி இணைச்செயலாளர்கள்- திரு ஐ ஆனந்தராசா, திரு இ வல்லிபுரம் பொருளாளர்- திரு க. மாணிக்கம் 12 பேர் கொண்ட நிர்வாகசபைக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது.

பம்பலப்பிட்டி, செவ்

தொழிலாளர் கல்வி நிலையங்களை ஆரம்பிக்க தீர்மானித்திருப்பதாக தொழில், வீடமைப்பு மந்திரி திரு எம். எச். மொகமெட் தெரிவித்துள்ளார்.

வரி விளம்பரம்

தவிட்டுப் பிடிப்புள்ள கைக்குத்து அரிசியில் இடித்து வறுத்தெடுத்த கலப்பற்ற மா. யாழ்ப்பாண பார்மஸி, 91, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 674

இடமாற்றம்

உரும்பிராயில் இருந்த சித்த ஆயுர்வேத டாக்டர் S A இராசையா L.I.M., ஆவணி முதல் நல்லூர் டெம்பிள் ரோட் 174 இல். வீட்டில் வசிப்பார். வைத்தியம் செய்யவேண்டியவர்கள் கலந்துகொள்ளலாம் 657

விற்பனைக்கு

356, கே. கே. எஸ். வீதியில் நவரை சந்திக்கருகாமையில் இரண்டு பரப்புக்காணி மாடி வீட்டுடனும் இரு மலசலகூடங்களுடனும் பைப் வசதியுடனும் விற்பனைக்குண்டு நேரில் வந்து பார்வையிடவும். 668

திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி ஒழுங்கையில் 15 பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கலாம், விபரங்கட்கு, சண்முகலிங்கம், 192, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம். 677

வைத்தியம்

சலரோகம். தொய்வு. வாதம், கிரந்தி, நீடு இளைத்தல், புத்திரக்பேறு. தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ செல்லையா, வைத்தியர், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 586

தேவை

நல்ல நிலைமையிலுள்ள B S. A ஜென்றம் மோட்டார் சைக்கிள் தேவை.

M & B அச்சகம், 119, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 676

கைக்குத்து அரிசிமா கொண்டு திரிந்து விற்பதற்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும். யாழ்ப்பாண பார்மஸி பெரியகடை. 675

தேவை

வெல்டர்ஸ் தேவை. விண்ணப்பதாரர்கள் ரூ. 250/- பணமாகப் பிணைப்பணம் செலுத்தவேண்டும் ஜவ்வர்ஜி பிரதர்ஸ் 150 சென்ற்ஜோசேப் வீதி, கிரண்ட்பாஸ் என்ற விலாசத்தற்கு விண்ணப்பிக்கவும் 662

கடைச்சல தொழிலாளர்கள் தேவை வயது 30க்குள். முதல்தரமான கொம்பனியில் தேர்ந்தது 10 வருட அனுபவம். பிணைப்பணம்: ரூ. 150/- பணமாகச் செலுத்தவேண்டும். ஜவ்வர்ஜி பிரதர்ஸ், 150, சென்ற் ஜோசப் வீதி, கிருண்பாஸ் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 663

விற்பனையாளர்களுக்குப்பதியும் அனுபவத்துடன் கிளிநொச்சியில உள்ள ஒரு புடவைக் கடைக்குத் தேவை. உடன் வேலை நல்லசம்பளத்துடன் கிடைக்கும் சிப்பைபி, 185/188 கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு வேலைநாட்களில் மாலை 3 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் நேரில் விண்ணப்பிக்கவும். 671

2 ஆண்டுக்குப் பின் பாராட்டுவிழா

பம்பலப்பிட்டி, புதன்

சிங்கள மொழிச்சட்டம் காரணமாக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கும், வேறு இலாகாக்களுக்கு மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் போக்குவரத்துச் சேம நலவுரிமைச் சங்கம் பாராட்டு விழாவொன்றை 2 ஆண்டுக்குப் பின்னர் நேற்று நடாத்தியது.

பலாலியில் போட்டி

குரும்பசிட்டி, செவ்

கொழும்பு மகாரகம ஆசிரிய பயிற்சிக கலாசாலை விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் அடங்கிய கோஷ்டி ஒன்று புதன்கிழமை இங்கு வரவிருக்கின்றது. பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியுடன் இவர்கள் கிரிக்கெட், வலைபந்தாட்டம், பாஸ்கெட் பந்தாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளில் போட்டியிடுவதற்காகவே விஜயம் செய்கின்றனர். சுமார் ஐந்து நாட்கள் இவர்கள் தங்கியிருந்துமேற்சொன்ன பலவித விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொள்வர்.

மீனாட்சிகோவில்

தர்மகர்த்தாக்களுக்கு வினோபா தந்தி

சென்னை, ஜூலை 20

மதுரை ஜில்லா சோழவந்தான் அருகே விளாம்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு பூதான தலைவர் திரு. ஜகந்நாதன் உண்ணாவிரதம் இருந்துவருகிறார். மதுரை மீனாட்சிகோவிலுக்குச் சொந்தமான நிலங்களைத் தனிநபர் ஒருவருக்குக் குத்தகைக்கு விட்டிருப்பதை ரத்துசெய்யக் கோரி அவர் உண்ணாவிரதம் இருக்கிறார்.

திரு. ஜகந்நாதன் தேகநிலை குறித்துக் கவலைதெரிவித்தும் தேவஸ்தான நிலங்களைச் சாகுபடியாளர்களுக்கு நேரடியாகக் குத்தகைக்கு விடுமாறு வற்புறுத்தியும் மதுரை மீனாட்சி கோவில் தர்மகர்த்தாக்களுக்கு வினோபாஜி தந்தியொன்றை அனுப்பியிருக்கிறார்.

உடற்பயிற்சிப் போட்டியில் முதல் ஸ்தானம்

குரும்பசிட்டி, செவ்

குருநாகலில் வாரஇறுதியில் நடைபெற்ற அகில இலங்கை மத்திய மகாவித்தியாலயங்களுக்கு இடையிலான 10-வது வருடாந்த விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட மல்லாகம் ஆங்கில இந்துக்கல்லூரி மேற்பிரிவு ஆண்கள் உடற்பயிற்சிப்போட்டியில் முதல் ஸ்தானம் பெற்றுள்ளது. பெண்கள் மத்திய பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளது. இதற்கான பரிசுகள் கல்விமந்திரி திரு. இரியகொல்லையினால் இரு கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டன. மேற்படி விளையாட்டுப்போட்டி பற்றிய சுற்றுநிருபம் தனிச்சிங்கள மொழியில இருந்த காரணத்தால யாழ் மாவட்ட பாடசாலைகள் பலவும் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாது போய்விட்டது.

திரைப்பட விழா

குரும்பசிட்டி, செவ்

செக்கோஸ்லோவாக்கிய குடியரசின் 20-வது ஆண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணம் ராஜா சினிமாவில் 26-ம் திகதி தொடக்கம் 30-ம் திகதி வரை திரைப்படவிழா நடத்தப்பட்டவிருக்கின்றது. இலங்கை — செக்கோஸ்லோவாக்கிய நட்புறவு சங்கயம் கிளையின் ஆதரவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத் திரைப்பட விழாவில் பரிசுபெற்ற திரைப்படங்கள் இலவசமாகக் காண்பிக்கப்படும்.

10 மாணவர்கள் தடுப்புக் காவல்

சென்னை, ஜூலை 20

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 10 மாணவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாய் முதல் மந்திரி அறிவித்தார்.

இலங்கை இந்தியர் பிரச்சினை: மல்வத்தை பீடாதிபதி அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

"இலங்கை இந்தியர் பிரச்சினையில் அன்பு வழிக்குமாறாக நடந்துகொள்ளக்கூடாது. ஏனெனில் தாய்நாட்டிற்குத் திரும்பவும் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியின் பேரில் இங்கு கொண்டுவரப்பட்ட துரதிர்ஷ்டசாலிகளான இந்தியத் தொழிலாளர்களின் தலைவிதியைப் பொறுத்ததே இப்பிரச்சினை; அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி புறக்கணிக்கப்பட்டுவிட்டது."

இலங்கை இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக, மல்வத்தை மகாநாயக்கதேரோ வண அமுனகம ராஜகுருசிறி விடலி, பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

இப்பிரச்சினையைக் கௌரவமான முறையிலும், பௌத்த வழிப்படியுமே தீர்க்கவேண்டுமென்பதுதான் எப்பொழுதும் எனது முடிவாக இருந்துள்ளது. இலங்கையிலுள்ள லட்சக்கணக்கான இந்தியர்களின் பிரச்சினை மலைநாட்டு சிங்களவர்களின் ஜீவமரணப் போராட்டமாக இருந்தபோதிலும், இவ்விஷயத்தில் நாம் அன்பு வழிக்கு மாறாக இருக்கக் கூடாது. இப்பிரச்சினை மற்ற எல்லாப் பிரச்சினைகளும் போன்று, நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து இருந்துவருகிறது, லட்சக்கணக்கான இந்தியர்கள் இங்கு வந்துள்ளார்கள், லட்சக்கணக்கானவர்கள் திரும்பிச் சென்றுள்ளார்கள். ஆரம்ப முதல் அவர்கள் வேலை தேடியே இங்கு வந்துள்ளார்கள், தற்பொழுது லட்சக்கணக்கான இந்தியர்கள் இங்கு எப்படி இருக்கிறார்கள் என்ற கேள்வி எழுகின்றது. இந்நாட்டில் அவர்கள் இயற்கையாகவே வளர்ச்சியடைந்தனர்கள் என்பதே அதற்கான பதில்.

தோட்டப்பகுதிகளிலுள்ள நெருக்கடிக்குக் காரணம் 1954ம் ஆண்டு இலங்கை இந்திய பிரயாண தடைதான். 1952ம் ஆண்டுக்குமுன் இந்தியா சென்றவர்கள் அங்கு பொருளாதார நிலை சீர்கெட்டிருந்ததால் திரும்பிவந்தனர். ஆனால் 52ம் ஆண்டிற்குப்பின் இந்தியாவில் நிலைமை மாறியுள்ளது. 1958ம் ஆண்டிற்குட்பின் இந்தியா செல்வோர் தொகை அதிகரித்துள்ளது. 1958ம் ஆண்டில் மட்டும் 28,000 பேர்கள் இந்தியா சென்றுள்ளனர். இது ஒரு பிரச்சினையாக எழுந்தபடியால் 1954ம் ஆண்டு இந்தியா, அங்கு செல்பவர்களுக்குத் தடைவிதித்தது. இதற்குமுன் பிரச்சினை இருந்ததில்லை.

இப்பிரச்சினை சாதாரணமானது. இப்பிரச்சினை தோல்வியடைந்தாலே, ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகளும் அவசியம். கடந்தகால நிகழ்ச்சிகளை மறந்துவிடவேண்டும் இலங்கை இந்தியர்களுக்கு எப்பொழுதும் இருந்துவந்த பிரயாண வசதிகளை அளிக்க இந்தியா முன்வரவேண்டும். இயற்கைக்கு நியாயமாக இந்தியா நடந்துகொள்ளவேண்டும்

சுகாதார அதிகாரியின் வடபகுதி விஜயம்

காங்கேசன்துறை, செவ்

சுகாதாரப் பகுதி உதவி அதிகாரி டாக்டர் டி. கே. டி. சில்வா கொழும்பிலிருந்து உத்தியோக பூர்வமாக முதல் முதலாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். அவருக்கு தெல்லிப்பழை சுகாதாரப் பகுதியினர் மத்திய போசனம் அளித்தனர்.

யாழ்ப்பாணத்தில் சுகாதார பரிசோதகர் சங்கத்தினரால் 'பாம் கோட்டில்' நடைபெற்ற விருந்துபசாரத்தில் பேசும்பொழுது டாக்டர் சில்வா குறிப்பிட்டதாவது, "நான் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் மெச்சுகிறேன். இந்த நாட்டில் வாழும் யாழ்ப்பாண மக்கள் விவசாயத் தொழிலிற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்கள்.

யாழ். சுகாதார பரிசோதகர் சங்கக் காரியதரிசி திரு. கே. ஜெயராசசிங்கம், டாக்டர் சில்வா தங்கள் அழைப்பை ஏற்று விருந்துபசாரத்தில் பங்குபற்றியதற்கு நன்றி பாராட்டிப் பேசினார்.

கட்டணம் பெற அனுமதியில்லை

கொழும்பு, செவ்வாய்

கட்டணம் வசூலிக்காத தனிப்பட்ட பாடசாலைகள் கட்டணம் வசூலிக்க அனுமதி கோரியதை கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல ஏற்க மறுத்துவிட்டார்.

ஏற்கனவே தனிப்பட்ட பாடசாலைகளை கட்டுப்படுத்தும் சட்டம் அமுலாக்கப்படுவதால் அதன்படி பாடசாலையில் பயிலும் மாணவரின் பெற்றோர்களில் 75 சதவிகிதத்தினர் உடன்பட்டால் மாத்திரமே அப்பாடசாலை கட்டணம் அறவிடலாம் எனவே அதைவிட தனிப்பட்ட பாடசாலைகள் கட்டணம் விதிப்பதை அனுமதிக்கமுடியாது என்று கல்வி அமைச்சர் தனிப்பட்ட பாடசாலைகளின் பிரதிநிதிகள் அவரைப் பேட்டி கண்டபோது கூறினார்.

"நிலத்தில் விழுத்தி காலாலும் கையாலும் அடித்தனர்"

இயக்கச்சி இராணுவத் தாக்குதல் வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, செவ்

5-7-64 அன்று மத்தியானம் நான் எனது தாயாருடனும் சகோதரிகளுடனும் வீட்டில் இருந்தேன், அந்நேரம் இராணுவவாகனம் ஒன்று ரோட்டால் வந்து அந்த தார்ரோட்டின் முடிவில் நின்றது. அதற்குள் இருந்து 25, 30 இராணுவத்தினர் கையில் கொட்டன்களுடன் இறங்கி வீதிக்கு அருகில் உள்ள வாடியில் இருந்தவர்களுக்கு அடிக்கத் தொடங்கினர். வாடி என்பது மீனவர்கள் தங்கி இளைப்பாறுவதற்குக் கட்டப்பட்ட கொட்டில். இச்சம்பவத்தை நான் வீட்டில் இருந்துதான் கண்டேன். அதேநேரத்தில் 15, 20 பேர் எனது வீட்டைச் சூழ்ந்துகொண்டு உள்ளேவந்து எனக்கு அடித்தார்கள். அப்போது அவர்கள் கதைத்துக்கொண்டு வந்ததை நான் காணவில்லை. அவர்கள் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. வீட்டு விறாந்தையில் நின்ற என்னை வளவுக்குள் இழுத்துச் சென்று நிலத்தில்போட்டு கால்களால் உதைத்து, கையாலும் தடிகளாலும் அடித்தனர்". இவ்வாறு இயக்கச்சி இராணுவ முகாமைச்சேர்ந்த 19 இராணுவத்தினர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோட்டில் நீதிபதி திரு பி ஜெபேர்ட் சில்வா முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது சாட்சியமளித்த மரியாம்பிள்ளை பெனடிக்ற் கூறினார்.

இவ்வழக்கில் சட்டவிரோதமாகக் கூட்டம்கூடிக் குழப்பம் செய்ததாகவும், தாழையடி வாசிகளான மரியாம்பிள்ளை பெனடிக்ற், அந்தோனி செபமாலை, அ. பத்திநாதர் ஆகியோருக்கு அடித்துக் காயம் விளைவித்ததாகவும், பீலிப்பு மோசெஸ் என்பவரின் வீட்டிற்கும் சி மரியாம்பிள்ளை என்பவரின் வீட்டிற்கும் சேதம் விளைவித்ததாகவும், அ. செபமாலையின் வீட்டிற்கும் உடைமைகளுக்கும் 8000 ரூபா நட்டமும், பீ பேதுறுப்பிள்ளையின் வீட்டிற்கும் உடைமைகளுக்கும் 600 ரூபா நட்டமும், அ பத்திநாதரின் காருக்கு 2000 ரூபா நஷ்டம் விளைவித்ததாக இராணுவத்தினர் மீது பளை பொலிஸ் இன்ஸ்பெக்டரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. மரியாம்பிள்ளை பெனடிக்ற் தொடர்ந்து சாட்சியமளிக்கையிற் கூறியதாவது;—

"எனக்கடித்தபின்னர் அவர்கள் வீட்டைவிட்டு வெளியே போனார்கள் அவர்கள் எனக்கு அடித்ததினால் கண்ணில் வலி இருந்தது, மேலெல்லாம் வலித்தது. இதனால் அவர்கள் எங்கு சென்றார்களென்று பார்க்க முடியவில்லை. 7-7-64 அன்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பிற்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து சென்றேன். அணிவகுப்பில் மூன்றுபேரை மாத்திரம் அடையாளம் காட்டினேன். அதற்குப்பின்னர் அவர்களைக் காணவில்லை. இச்சம்பவம் ஒரு வருடத்திற்கு முன்னர் நடந்தமையால் அவர்களை இப்பொழுது அடையாளம் காட்ட முடியாமலிருக்கின்றது.

முதல் சாட்சியமளித்த ராசநாயகமும் நானும், ஒரே வளவிற்குள் பக்கத்து அறையில் வசிக்கிறோம், சம்பவம் நடைபெற்ற தினம் அவர் வீட்டிலில்லை. முதல் நாள் இரவு சில இராணுவத்தினர் எனது வீட்டிற்கு வந்து தண்ணீர் தரும்படி கேட்டார்கள் நான்செம்பில் தண்ணீர் கொடுத்தபோது அவர்கள் கிளாஸில் தரும்படி கேட்டார்கள், அப்பொழுது ராசநாயகம் தனது அறைவிறாந்தையில் நின்றுகொண்டிருந்தார், நான் இராணுவத்தினரிடம் இந்த நேரத்தில் கிளாஸ் எடுப்பது கரைச்சல் என்று சொன்னேன், அவர்கள் தாங்கள் உள்ளே நுழைந்து எடுக்கவா என்று கேட்டனர், உடனே ராசநாயகம் என்னருகில் வந்து உள்ளே நுழைந்து எடுக்க உங்களுக்கு அதிகாரமில்லை என்று கூறி இராணுவ காவல் முகாம் அருகே இருக்கிறது அங்கு போய் தண்ணீர் வாங்கவும் என்று கூறினார் உடனே அவர்கள் போய்விட்டனர், அணிவகுப்பில் அடையாளம் காட்டிய இருவர் 5-7-64 அன்று என்னைத் தாக்கியவர்களுடன் நின்றனர், அவர்களும் எனக்கு அடித்தவர்களா என்றுகூறத்தெரியாது".

எதிரிகளின் வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போது சாட்சி "பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுக்கும்போது என்னைத் தாக்கியவர்களை முன்னர் ஒருபோதும் காணவில்லையாதலால் அடையாளம்காட்டமுடியவில்லை என்று சொன்னேன்" என்றார்.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிரிகள்சார்பில் வழக்கறிஞர் திரு கே.வி. எஸ். சண்முகநாதன் திரு சி பாலகிருஷ்ணனின் உதவியுடன் ஆஜரானார்.

முடிக்குரிய தரப்பில் திரு ஆர். அபயசூரியா பளை சப் இன்ஸ்பெக்டர் திரு செல்த் லாப்ரூயின் உதவியுடன் வழக்கை நடாத்தினார்.

அமெரிக்க விளையாட்டுகோஷ்டி இலங்கை விஜயம்

பல கல்லூரிகளுக்குஞ் செல்வர்

யாழ்ப்பாணம், புதன்

அமெரிக்காவிலுள்ள மஸ்ஸசூசெத்ஸ் ஸ்பிறிங்பீல்ட் கல்லூரியின் பொது அறிவிப்பு அத்தியட்சகர் ஜோர்ஜ் டி ஆட் தமது பாஸ்கட் பந்து விளையாட்டுக் கோஷ்டியுடன் இலங்கைக்கு வந்துள்ளார்.

பந்து விளையாட்டு வீரர்களையும், இரண்டு போசகர்களையும் கொண்ட இக் கோஷ்டிக்குத் திரு ஆட் மத்தியஸ்தராக விருப்பார்.

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து, யாழ்ப்பாணத்திலுள்ள உயர்தர கல்லூரிகளுக்கு விஜயம் செய்து அவ்வக் கல்லூரி மாணவர்களுக்குப் பாஸ்கட் பந்து விளையாட்டுச் சம்பந்தமான சகல நுணுக்கங்களையுஞ் சொல்லிக் கொடுப்பார்கள் எனத் தெரிய வருகிறது.

கோஷ்டியின் தலைவரான ரசெல் வோசகா சர்வதேச புகழ்பெற்ற விளையாட்டு வீரராவர். இவர் இங்குள்ள மாணவர்களுக்குப் பாஸ்கட் பந்து விளையாட்டு ஒழுங்குகள் பற்றிப் பயிற்சியளிப்பார்.

வசதியை முன்விட்டு அசையும் நிழற்படங்கள் காட்டப்படலாம் எனவும் அறியப்படுகிறது.

"ஸ்பிறிங் பீல்ட் கல்லூரியிலேதான் முதன் முதலாகப் பாஸ்கட் பந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வொலிபோல ஆட்டமும் எங்கள் கல்லூரியின் திறமையான பயிற்சியினால்தான் உலகமெலாம் பரவியிருக்கின்றது

"அமெரிக்காவின் விளையாட்டு மைதானங்கள் அனைத்தும் கட்டிடங்களாகவே இருக்கின்றன. ஜிம்னேசியம் என்று சொல்லப்படுகிற அந்த உள்ளரங்க மண்டபத்தின் உள்ளேதான் எந்த விளையாட்டையும் அமெரிக்கர் விளையாடுவார்கள் இத்தகைய ஜிம்னேசியத்துள் 8500 க்கும் அதிகமான மக்கள் இருந்து விளையாட்டுகளை ரசிக்கமுடியும்" என்று திரு ஆட் கூறினார்.

திரு ஆட் தொடர்ந்து கூறியதாவது:

"யாழ்ப்பாணத்திலும் சரி, இலங்கையின் மற்றைய பாகங்களிலும் சரி மாணவர்கள் மாணவிகள் விளையாட்டுத் துறையில் மிக்க ஆர்வங்காட்டி வருகிறார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள சில கல்லூரிகளின் விளையாட்டுத்திடல்கள் மிகவும் அழகாகவும், ஏற்ற முறையிலும் அமைக்கப்பட்டிருப்பதைக் காண மிக்க மகிழ்ச்சியாயிருக்கிறது."

மஸ்ஸசெத்ஸில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் இப்பாஸ்கட் பந்தாட்டக் கோஷ்டியினர் இன்று புதன்கிழமை பட்டக்கலை [illegible]க்கும் விஜயஞ்செய்ய உத்தேசித்திருப்பதாகத் திரு. ஆட் கூறினார்.

ஐம்பதாவது வயதில் வழக்கறிஞரானார்

பம்பலபிட்டி, செவ்

தன்வாழ்க்கையில் என்றேனும் ஒருநாள் நீதிக்கும் நியாயத்திற்கும் வாதாடும் வழக்கறிஞராக வாழ்ந்து, நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் தொண்டு புரியவேண்டுமென்ற தமது இலட்சியத்தை முதுவாழ்வில் நிறைவேற்றியதற்கு விடாமுயற்சியே காரணம்" இவ்வாறு நியாயதுரந்தரர் திரு. தில்லைநாதன் வழக்கறிஞர் திரு. அ குலநாயகத்தைக் கௌரவிக்குமுகமாக நடைபெற்ற விருந்து உபசாரத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நீதியரசர்கள் திரு எச் ரி பெர்னாண்டோ, திரு டி எஸ் பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் அண்மையில் வழக்கறிஞராக விசுவாசப்பிரமாணம் செய்துகொண்ட திரு. குலநாயகத்தை கௌரவித்து 'நாஷனல், ரெஸ்ரோறன்டில்' நடைபெற்ற விருந்துஉபசாரத்தில், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், கல்விமான்கள்' வர்த்தகர்கள், இன்னும்பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

50 வது வயதில் வழக்கறிஞராகியுள்ள திரு. குலநாயகத்தைப் பாராட்டி வழக்கறிஞர்கள் திரு சரவணமுத்து, திரு விக்டர், டாக்டர் வைத்திலிங்கம், அ. தி. சம்பந்தன் ஆகியோரும் பேசினார்கள்.

கூ. மொ. வி.

சில்லறைக் கடைகள் மூடப்படாது

கொழும்பு, செவ்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சில்லறைக் கடைகளை மூடாது என்றும் இலாபம் காட்டாத சில்லறைக் கடைகள் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் கூ. மொ. வி தலைவர் திரு. ஜே. ஏ. அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

சைவப் பெரியார் நினைவுதினம்

சுழிபுரம், செவ்வாய்

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின் நினைவுதினத்தைக் கொண்டாடுவதற்கு அவரது மாணவர்கள் ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பல பெரியார்கள் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள்.

கல்வி மந்திரி கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கல்விமந்திரி திரு ஐ எம். ஆர். ஏ. இரியகொல்ல, இம்மாதம் 25ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும் நவாலி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்

கி. ச. தலைவர் மறைவு

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் கிராமசபைத் தலைவர் திரு ப. ராஜகுலசேகரம் காலமாகிவிட்டார். காலம்சென்ற ராஜகுலசேகரம் ஒரு சமாதான நீதவானாகவும் பணியாற்றினார்.

வரவேற்புக் கொண்டாட்டம்

எங்கள் மகன் டாக்டர் யோகானந்தா பசுபதியினதும் மருமகள் டாக்டர் (திருமதி) [illegible] பசுபதியினதும் திருமணத்தின்பின் ஜூலை 24-ந் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் "கஸ்தூரியார் வளவு" கஸ்தூரியார் வீதியிலுள்ள எங்கள் இல்லத்தில், மணமக்களின் வருகையை முன்னிட்டு நடைபெறவிருக்கும் வரவேற்புக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும்படி நண்பர்களையும் உறவினர்களையும் அழைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

டாக்டர் வி. ரி. பசுபதியும்,
467 திருமதி கமலாம்பிகை பசுபதியும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.